நிருவாக அலுவலர் அலுவலகம் இவற்றையெல்லாம் இணைத்து அவர்களுக்குத் தனித்தனி அறைகளை ஒதுக்கி, கூட்டரங்கை அமைத்து, இதுவரை இல்லாத அளவில் தலா ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் 600 புதிய ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இடவசதி இருக்குமேயானால், நீங்கள் குறிப்பிட்ட நான்கு இடங்களில் மட்டுமல்ல, அதற்கு மேலும் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

235—

அங்கன்வாடி மையம்

***1625—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, கடுவெளியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு வட்டாரம், கடுவெளியில் உள்ள குழந்தைகள் மையமானது 1998 ஆம் ஆண்டு முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால், குழந்தைகள் பாதுகாப்பு கருதி, இம்மையம் அருகில் உள்ள வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது. பழைய கட்டடத்தை பழுதுநீக்கி சீர்செய்ய முடியாத நிலையில் உள்ளதால், அதனை முழுவதுமாக இடித்துவிட்டு இம்மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 மே 6]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக்காலத்தில், 8 அங்கன்வாடி மையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, இன்னும் பணி துவங்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பணிகள் துவங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியில் 8 அங்கன்வாடி மையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறினார்கள். அது ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கைக்கு அரசு சிறப்பு கவனம் செலுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கூறி, சரி செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

236—

கால்நடை மருத்துவமனை

***10138—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், நடுப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?